
கடன் வாங்கி
கல்யாணம்

# கதைச் சுருக்கம்

கடன் வாங்கி காலந்தள்ளுவதே ஒரு சிலருடைய வழக்கம். அவர்களின் தலைவனென திவான்பகதூர் தர்மலிங்கம் பிள்ளையைக் கூறலாம். யாரையாவது எட்டியாவது பிடித்து கடன்வாங்கி அவன் ஒரு பெரிய பணக்காரனென்ற பெயரோடு வாழ்ந்துவந்தான். அவன் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள கொடுஞ் செயலைக் கூட செய்ய அஞ்சமாட்டான். தட்டிப்பேசி தருமநீதிபுகட்டவந்த தன் தந்தையை தனியாக ஒரு அறையில் அவன் பூட்டியே வைத்திருந்தான். தனது விருப்பங்களை நிறைவேற்ற பீம்சிங், ராம்சிங் என்ற இரு கையாட்களைக் கொண்டான். தனது பெருமையை எடுத்துக்கூறி கடன் வாங்க வழி காட்டுவதற்கு நமச்சிவாயம் என்பவனைத தனது அந்தரங்க குமஸ்தாவாக நியமித்துக் கொண்டான். ஆனால் அவனோ கைதேர்ந்த பேர்வழி. தர்மலிங்கத்திடம் வேலை செய்தாலும் யாவர்க்கும் நன்மையே செய்து வந்தான். அவன் ஒரு நாடகக் குழுவையும் நடத்தி வந்தான்.

அவனது அத்தான் சொக்கலிங்கம். அவன் கருணாகரம்பிள்ளையென்ற ஜமீன்தாரிடம் கணக்காளனாக வேலை பார்த்துவந்தான். தன்மகள் உஷாவிற்கு நல்ல பெரியஇடமாகப் பார்த்து மணம்செய்து வைக்கவேண்டுமென அவன் விரும்பினான். ஆனால் உஷாவோ நமச்சிவாயத்தைக் காதலித்தாள். நமச்சிவாயம் உஷாவையே விரும்பினான். அந்த வீட்டில் சொக்கலிங்கம் ஒருவனைத்தவிர மற்றவர் யாவரும் ஒரு கட்சியாக இருந்தனர். சொக்கலிங்கம் எங்கிருந்தாவது ஒருவரைத் தேடிக்கொண்டு வந்தால், அச் சம்பந்தத்தைக் கலைத்து விடுவதே அவர்களது வேலை.

ராவ்பகதூர் கருணாகரம்பிள்ளை ஒரு பெரிய ஜமீன்தார். அவருக்கு ராஜாக்களென்றாலும், சன்னியாசிகளென்றாலும் மிகவும் பிடிக்கும். வெள்ளை உள்ளம் படைத்தவா. அவருக்கு துணை அவரது ஒரே பேத்தியான மஞ்சுளாதான். இந்த ஜமீன்தாரின் ஆஸ்தியைஅபகரிக்க வேண்டுமென்ற கெட்டஎண்ணம் தர்மலிங்கத்திற்குத் தோன்றியது. லண்டனுக்குச்சென்று டாக்டர் படிப்பு படித்துவரும் தன் மகன் தியாகுவுக்கு மஞ்சுளாவை விவாகம்செய்து வைக்கத் தீர்மானித்துக் கொண்டான். அதற்காக அவன் சொக்கலிங்கத்திற்கு பணம் லஞ்சமாகக் கொடுத்து தன் வேலையை சாதித்துக்கொள்ள முயலலானான். எனவே அவன் தன் மகனுக்கு ஏற்கனவே விவாகம் செய்து வைத்திருந்த லீலாவை பற்றிக் கவலைகொள்ளவில்லை. அவள் இறந்துவிட்டது போலவே பாவிக்கலானான்.

லீலாவுக்கு தாய் தந்தையர் கிடையாது. அவளது அண்ணன் [illegible]கராஜன் தேசியப்போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைசென்று[illegible]ட்டான். அவன் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கையில் மஞ்

சுளாவைக் காதலித்தான். இருவர் மனமும் ஒன்ருகிவிட்டதால் மஞ்சுளாவுக்கு ராஜனைப்பற்றிய முழுவிவரமும்தெரியும். லீலாவின் குடும்பச் சொத்தை தர்மலிங்கம் அபகரித்து அவளை நிர்கதியாக்கியதை அறிந்த மஞ்சுளா அவளை ரகசியமாகக் காப்பாற்றி வந்தாள். இந்த விஷயம் நமச்சிவாயத்திற்கும்தெரியும். தருமலிங்கத்தின் துராசைக்காக லீலாவின் வாழ்வு பாழாகிப்போவதை அவன் விரும்பவில்லை. தருமலிங்கத்திற்குத் தக்கபாடம் கற்றுக்கொடுக்க நினைத்தான்.

ராஜன் சிறையிலிருந்து விடுதலை பெற்றதும் மஞ்சுளாவின் மூலம் நடந்ததையறிந்து தருமலிங்கத்திற்கு நீதி சொல்லப் போகலானன். ஆனல் நமச்சிவாயமோ அவனைத் தடுத்து "மஞ்சுளாவை நீங்கள் மணக்கவும் உங்கள்தங்கை லீலா சுகப்படவும் ஒரேவழிதான் உண்டு. அதற்கு, நான் சொல்வதுபோல நாடக மாடவேண்டும்" எனக் கூறி, ராஜனையும் மஞ்சுளாவையும் சம்மதிக்க வைத்தான்.

எனவே திட்டமிட்டபடி ராஜன் லீலாவை தர்மலிங்கத்தின்வீட்டில் கொண்டுபோய்விட்டான். தர்மலிங்கம் ராஜனை மிரட்டிப் பார்த்தான். அவனுக்கு ஜீவனும்சம் கொடுப்பதாகக் கூறினன். தனது தங்கை லீலாவைமட்டும் அங்கிருந்து அழைத்துக்கொண்டு அவன் போய்விட வேண்டுமெனக் கூறினன். அதற்கு ராஜன் "லீலா தன் புருஷன் வீட்டிற்கு வந்திருக்கிருள். மரியாதையாக மருமகளாக ஏற்க வேண்டும்" என்ருன். உடனே தர்மலிங்கம் தன் கையாட்களான பீம்சிங்கையும் ராம்சிங்கையும் கூப்பிடவே ராஜன் அவர்களை அடித்து வீழ்த்தினன். இதைக்கண்டு பயந்த தர்மலிங்கம் லீலாவை தன்வீட்டில வேலைக்காரிபோன்றநிலையில் வைத்துக்கொள்ள சம்மதிப்பதாயும் அவள் ஊமைபோல இருக்கவேண்டுமெனவும் நிபந்தனை விதித்தான். கதியற்ற பேதைப் பெண் லீலா அதற்கு ஒப்புக்கொண்டாள். ராஜன் ஒருவாறு மனம் தேறி சென்ருன்.

நமச்சிவாயம் ராஜனுக்கு தன் நாடகக் கம்பெனியிலிருந்த ராஜா பார்ட் உடைகளை அணிவித்து கருணகரம் பிள்ளையின் வீட்டிற்கு அழைத்துச் சென்று டகல்பூர் ராஜாவென அறிமுகம் செய்து வைத்தான். ராஜா என்றதுமே கருணகரம்பிள்ளை அவனுக்கு ஆயிரம் உபசாரம் செய்து தன் இருப்பிடத்திற்குப் பக்கத்திலேயேஉள்ள தனது மற்ருெரு மாளிகையை ஒழித்துக் கொடுத்து அதில் வசித்துவரச் சொன்னர். அவனுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுத்து மஞ்சுளாவையும் அடிக்கடி கவனித்துக்கொள்ளும்படி கூறினர். மஞ்சுளாவுக்குத்தான் அந்த ராஜா யாரெனத் தெரியுமே.

தருமலிங்கத்தின் மகன் தியாகராஜன் லண்டனிலிருந்து ஊர் திரும்பினன். அவன் தனது தாத்தாவின் வாயிலாக தனது தந்தை

செய்துவரும் அக்கிரமங்களைத் தெரிந்துகொண்டான். தன் வீட்டில் வேலைக்காரியாகஇருக்கும் லீலா தனது சொந்தமனைவியே என்பதும் அவனுக்குத் தெரிந்துவிட்டது. தன்பொருட்டு லீலாபடும் அவஸ்தை யைக் காண அவன் மனம் தாளவில்லை. எல்லாவற்றிற்கும் ஒருவழி காண முயன்ருன்.

அப்போது நமச்சிவாயத்தின் மூலம் லீலாவின் அண்ணன் 'ராஜா'வாக நடித்து கருணகரம்பிள்ளையின் வீட்டில் இருப்பதும் அத்தகைய நாடகம் எதற்கு என்பதும் அவனுக்குத் தெரிந்தது. எனவே தன் மனைவி லீலாவுக்கும், தன்மைத்துனன் ராஜன், மஞ்சுளா இவர்களுக்கும் தெரியாமல் ரகசியமாகவே நமச்சிவாயத்தின் திட்டங்களுக்கு உதவி புரியலானுன். அவனும் அந்த நாடகத்தில் பங்கெடுத்துக்கொண்டான். எல்லாம் சுவாரசியமாக நடக்கலாயிற்று.

தருமலிங்கம் தன் மகன் தியாகுவிடம் மஞ்சுளாவைக் காதலிக்கும்படி கூறி அனுப்பவே அங்குதன் மைத்துனனையும், மஞ்சுளாவையும் ஒரு கலக்கு கலக்கி விட்டான். கருணகரம் பிள்ளையின் மனதையும் ஒரு நிலையிலிருக்கவிடவில்லை. வீட்டிலோ 'இங்கிலாந்து வழக்கம் இப்படித்தான்' என்று ஊமை வேலைக்காரியாக நடிக்கும் லீலாவிடம் நெருங்கி பழகலானுன்.

கருணகரம்பிள்ளை மஞ்சுளாவை ராஜாவுக்கே விவாகம் செய்து வைக்க நிச்சயித்தார். அப்போதாவது உண்மையைக் கூறிவிட நினைத்து ராஜன் தனது நிலையை ஒரு கடிதத்தில் எழுதி அனுப்பினுன். ஆனுல் பாதிவரை அக்கடிதத்தைப் படித்த கருணகரம்பிள்ளை மஞ்சுளாவை ராஜா காதலிக்கிருனென்ற முற்பகுதியை மட்டும் படித்து திருப்தியடைந்தவராய் மற்றப்பகுதியை படிக்காமலேவிட்டுவிட்டார். அக கடிதத்தைப் படிக்கும்போது தருமலிங்கம் அங்கு வந்ததால் அவனிடமும் அவர்ராஜாவின் சம்மதத்தைக்கூறி தன் பேத்தியை ராஜாவுக்கே கொடுக்கப்போவதாகக் கூறி அனுப்பிவிட்டார்.

ஆனுல் தந்திரத்தில் கைதேர்ந்த தர்மலிங்கம் தளர்ந்துபோய் அத் திருமணத்தை நடக்கவிட்டானு?

அதற்கு மாற்ருக நமச்சிவாயம் என்ன செய்தான்?

தமது எண்ணம் பூர்த்தியாகப் பெரியவர்களெல்லாம் சமயத்திற்குத்தக்க வேஷம் போடாமல் இருப்பார்களா?

யார் எந்த வேடம் போட்டாலும் பெரியவர்களின் மனம் நோகாமல்நற்புத்தி புகட்டிய நமச்சிவாயத்தின் திட்டம் எப்படி உருவெடுத்தது?

இதை யெல்லாம் வெள்ளித்திரை விவரமாக விளக்கி உங்களுக்குக் களிப்பூட்டும்.

P. SUNDARAM,
NEWS AGENT,
NO. 2. ROAD. KORANAD
MAYURAM

# கடன் வாங்கி கல்யாணம் பாடல்கள்

## 1

கடன் வாங்கி கல்யாணசாதம் சாப்பிடடா மனிதா
கடந்த ஞானிபொன்மொழிபோல் நடந்திடடா மனிதா (கடன்
கன்னக்கோலும் தவறுடா கத்திரிக்கோலும் தப்புடா
முன்னே பின்னே யோசிக்காமே கடனைவாங்கி ரொப்புடா (கடன்
குடியிருக்கும் வீட்டைக்காட்டி சொந்தமென்று சொல்லடா
கொடுத்த பணத்தைக்கொண்டு சொந்த வீடு கட்டிக்கொள்ளடா
ஆறு நூறு வட்டி அதிகம் ஆனாலும் அஞ்சாதேடா
அதுக்கும் மிஞ்சிப் போனா ஐ. பி. எழுத்து ரெண்டு இருக்குடா (க

## 2

மஞ்சு: மதுவேந்தும் மலர்களும் மலராமலே
மயிலாடும் சோலை அழகே இல்லை.
மகிழ்ந்து கனிந்தாடி மனதில் உறவாடும்
வசந்த ருதுவே வரவே இல்லை.
காலமில்லாத காலத்திலே குயில்பாடுவதும் எதனாலே?
நேரமில்லாத நேரத்திலே நிலை மாறுவதும் எதனாலே?
உஷா: பிரேமையின் வேகமே பொங்கியகீதமாய்
பேசிடுதே இதயவீணையிலே
உனதாசைக் காதலனைப் பார்த்ததினாலே
உள்ளமே வசந்த ருதுவானதே.
காலமில்லாத காலத்திலே குயில்பாடுவதும் அதனாலே
நேரமில்லாத நேரத்திலே நிலைமாறுவதும் அதனாலே.
மஞ்சு: ஈடில்லா தாராவின் சுடரோடு தவழ்ந்தாடும்
இரவே இன்னும் வரவே இல்லை.
நீல வானகமேல் நீந்தியே விளையாடும்—வெண்
நிலவே இன்னும் வரவே இல்லை.
காலமில்லாத காலத்திலே நிலவும் வந்தது எதனாலே?
நேரமில்லாத நேரத்திலே நிலைமாறுவதும் எதனாலே?
உஷா: எண்ணிய எண்ணங்கள் இனிதாகுமே என்று
தன்னை மறந்தே உள்ளம் பொங்கிடுதே.
கனவே தினம் காணும் கன்னிப்பெண்களுக்கே—
காதலனே வெண்நிலவும் ஆவான்
காலமில்லாத காலத்திலே நிலவும் வந்தது அதனாலே
நேரமில்லாத நேரத்திலே நிலைமாறுவதும் அதனாலே.

3

லீலா: ராம ராம சரணம் பட்டாபி ராம சரணம் (ராம
தாடகையை வதைத்து—தவ முனிவன் வேள்வி காத்து—கற்
சிலைக்குப் பிராணன் தந்து--துயர் தீர்த்துவைத்து அருள்புரிந்த
சிவதனுசை வளைத்து ஸ்ரீ ஜானகியை மணந்து—
தந்தை வாக்கிய மேந்தி—தவக்கோலத்தோடு வனமடைந்த
லங்கை வேந்தன் மாள ஜெகமெங்கும் நாமம் சூழ
மங்கை சீதையோடு—மா நகர் அயோத்தி ஆண்டு வந்த (ராம

4

அமச்: தென்னாடு முதல் இனி எந்நாட்டு மேடையிலும்
என் வேஷத்தைக் கண்டு புகழ வேண்டும்
தென்பாங்கு வடபாங்கு தில்லானுடோமரி
சிங்கம் வந்தாரென்று மகிழவேண்டும்.
பொன்னுடை போர்த்தியே பூமாலை சாத்தியே
புதுப்புது பட்டங்கள் கட்டவேண்டும்.
தன்னாலே ஹோட்டல் முதல் தமிழ்நாடு யாவுமே
எந்நாளும் கடன் தந்து காக்கவேண்டும்.

5

கு. மாது: மனக்கோயில் உனக்காகவே—சுவாமி
மறவாமல் உனைக்காணவே—சுவாமி (மன
மலர்கணை வீசும் மதன சிங்காரா
மருவிடவே வாராய்—சுவாமி (மன
ஆசை இன்னவிதமாய் இருக்குமென்றறியேன்
அன்பின் வலைதனிலே அகமகிழ்ந்தேன்.
அலைபோல் மனமே நிலைமாறிடுதே.
அனுராக நிலைகாணவே—சுவாமி (மன
காதலர் இருவர் கருத்தொருமித்தே
ஆதரவு பட்டதே இன்பமென்றார்—தமிழ்
வேதமே வாழ்வின் பாதை ஆகுமே
சோதனை இன்னும் ஏனோ சுவாமி... (மன

அமச்: கன்னியின் ஆசையால் காவலன் கடமையை மறந்ததாலே
இன்னலால் மக்களும் இகமீதில் சுகமிழந்து ஏங்கிகின்றார்
மன்னனும்ராணியை நாடாமலே, அமைச்சர்முகம்பாராமலே
பொன்னிகரும் நாடு இந்நிலையில் சீர்கேடாய் ஆனதன்றோ

மந்திரி: உன் சுகமே பெரிதாக எண்ணுதல் முறையோ அம்மா
மன்னுயிர் நிலைமையை மனதார எண்ணி நீயே

தன்னலம் பாராமல் தியாகம் செய்தால் என்றுமே
உன்னே போற்றுவார் உலகினில் புகழ் ஓங்கவே
க. மாது: உன் செவியில் கேளாததேனே-சுவாமி
என் செவியில் வீழ்ந்ததே கெஞ்சும் குரல் ஓசை (உன்
அரசே இல்லா நாடு அநியாயமாய் கேடு
அடைந்ததால் மக்களும் அவதிப்படலானர்
ஆகாய வெளியோடு ஏராளதீனக்குரல்
அபயம் அபயம் என்றே அலறுதே மன்ன (உன்
அன்னியரின் சூழ்ச்சியால் உந்தன் அரசாட்சியே
அடிமையாய்ப் போவதோ பாராயோ-மன்ன
ஆகாய வெளியோடு ஏராள தீனக்குரல்
அபயம் அபயம் என்றே அலறுதே மன்ன

## 6

கமச்: அக்கா மகளே அரை லூசான உங்க அப்பா மகளே
முக்காலும் காலும் ஒண்ணு—அதைப்போல
எக்காலும் நாமும் ஒண்ணு.
ஆத்துகுடி சாததுக்குடி நான்சொல்லுறதைக் கொஞ்சம்வுத்துக்கடி
ஆத்திரத்தை மாத்திக்கடி—உங்க அப்பா மனசை தேத்திக்கடி.
உஷா: பொம்பளேயை ஆசைஎன்னும் கம்பளியால் மூடாதே-கையில்
தம்பிடியும் இல்லாமே சும்மா தரிங்கிணத்தோம் போடாதே.
போத்தனூருஓமபபொடிசும்மாப ா தீசொக்குப்பொடி
காத்திருந்துசட்டப்படிதாலிகட்டாமே ச இ படி
கமச்: இரும்பு மனசு உங்கப் ாரு—அதுக்கு
இங்கேதான் கொஞ்சம் ரிப்பேரு.
கரும்புபோல மனசை மாத்தி கருணே எப்போ வைப்பாரு.
உஷா: நாணயமின றி நடக்கிறதா—இந்த
நமச்சிவாயத்தில் சொக்குறதா—
நாடகக்காரனே நம்பியே நானும் நடுத்தெருவிலே நிக்கிறதா?

## 7

மஞ்சு: எங்கிருந்து வீசுதோ—இனிதாகவே தென்றல்
இலேகளேயும் தழுவியே, மலர்களேயும் மருவியே
இயற்கையாவும் அன்பினுல்—ஆசையால்—இன்பமாய்
இணேந்து ஊஞ்சல் ஆடவே
ராஜா: எங்கிருந்து வீசுதோ—இனிதாகவே தென்றல்
வெண்ணிலாவில் ஆடியே, புன்னகையால் பாடியே

மனம் மயங்கி ஆசையால்—அன்பினுல்—இன்பமாய்
மெய்மறந்து போகவே.
மஞ்சு: எங்கிருந்து வீசுதோ இனிதாகவே தென்றல்
இதய வீணை மீட்டியே இன்பகீதம் பாடியே
இயற்கையாவும் அன்பினுல்—ஆசையால்—இன்பமாய்
இணைந்து ஊஞ்சல் ஆடவே. (என்

## 8

மஞ்சு: சுந்தராங்கியைப் பார்த்ததினுலே
சிலபேர் மனமே சீறுவதேன் சிலபேர்குணமே மாறுவதேன்
தியாகு: பருவமும் அழகும் பணமும் நிறைந்தவள்
பாரினில் கிடைப்பது அரிதாமே
பைங்கிளி வேறிடம் பறந்திடுமோ என்ற
பயத்தாலே மனம் ஏங்கிடுதே (சுந்
ராஜன்: இதயமேவிடும் காதல்கீதமே மதுரமாகவே கனிந்திடுதே
புதுமை காணவே ரகசியம் பேசும்
புன்னகை வதனம் கவர்ந்திடுதே
மஞ்சு: காதல் சோதனையில் கலந்ததினுலே
சிலபேர் பரவசமடைவதும் ஏன்
சிலபேர் கலவரம் அடைவதும் ஏன்?
தியாகு: கன்னியின் அருகில் அன்னியன் இருந்தால்
கவலையினுல் மனம் வேகாதா
காதல் போட்டியில் வெற்றி காணும்வரை
கனவிலும் கலவரம் ஆகாதா
ராஜன்: கோகில கானத்தின் இனிமையினுலே
குலவிடவே இனித் தோணுதா
கோரிய வரம்தரும் காதல் தேவியை
கண்டால் பரவசமாகாதா (சுந்

## 9

தியாகு: போதும் உந்தன் ஜாலமே—புரியுதே உன் வேஷமே.
ஊமையான பெண்களுக்கே ப்ரேமை உள்ளம் இருக்காதா
ஆவல்மீறி காதலினுல் அல்லிவிழிகள் துள்ளிடுதே
அந்தரங்கம் யாவையுமே அழகு முகமும் சொல்லிடுதே (போ
பேசாமல் இருந்தாலென்ன பிரேமை பாஷை இதுதானே
ஆசையோடு பாசம் வைத்தால் தாசனுக் வாழ்வேனே (போ
பெண்ணரசி உன்னழகால் என்னையே நான் மறந்தேனே
இன்னும்என்ன தாமதமோ உன்னைஎன்றும்பிரியேனே (போ

## 10

நள தமயந்தி—கனவு

தேவே: தன் மனதை நளனுக்கே தத்தம் செய்தாள் அந்த தமய
வன்மையுடன் சுயம்வரம்நாட்ட முன்வந்ததும் விந்தையன்
விண்ணவர் நால்வரும் மண்ணுலகைநாடி அம்மங்கையாளின்
எண்ணமே யாதெனச் சோதனை செய்யவே விரைந்துவாரீர்

தேவே: வாழ்க நளராஜனே வானவர் அதிபன் யாம்
வருணன் அக்கினி எமன் இவர்களன்றோ

நளன்: தனயனுனேன் அமரர் ஆக்ஞை எதுவானுலும்
கண்யமுடன் ஏற்றுப் பணியாற்றுவேனே

தேவே: தேவர்கள் நாலவரில் எழில் மேவும் ஒருவரை
தமயந்தி மாலையிட புகல வேண்டும்

நளன்: சுரராஜன் மொழிபோல தவருமல் செல்லவே
சுந்தரியின் அந்தப்புரம் எளிதல்லவே

தேவே: தேவர்கள் தூதனுய்ச் செல்லும்போது
திடமின்றி உடல்குன்றும் சந்தேகமேன்
சிரம்மீதில் இதைக்கொண்டு சென்றிடில் உருவமே
மறைவாகும் மயங்காதே விரைந்தேகுவாய்

தமய: அந்தப்புரம் நாடி அனுமதி இல்லாமல்
அஞ்சாமல் வந்ததாரோ?

நளன்: அமரேந்திரன் அக்கினியும் எமராஜன் வருணனும்
அனுப்பிய தூதனும் நளராஜனே
அவர்களில் ஒருவரை அன்புடன் அழகியே
வரனுகப் பெறவேண்டுமாம்—பெண்ணே
வரனுகப பெற வேண்டுமாம்.

தமய: அன்னத்தின் தூதாலே உம்மை நினைத்த நான்
அகிலமே பிரண்டாலும் மாறுவேனே.

நளன்: அன்புடனே என்னை மணந்தாலும் மகிழ்ந்தாலும்
அமரர்கள் அல்லலும் நேர்ந்திடாதோ.

தமய: அல்லலைச் சுகமாக உள்ளமே கனிவோடு
அன்புடனே ஏற்றுக்கொண்டு நானே—உமக்கே
ஆவலுடன் மாலை சூட்டுவேனே—மாலை சூட்டுவேனே.

தமய: எத்தனை ஜென்மங்கள் அடியேன் எடுத்தாலும்
என் கணவன் நளனுமன்றோ
இன்னும் இவ்வேழையின் இதயம் துடிக்கவே
சோதனை செய்வதும் அநீதியன்றோ

சத்தியம் நிலைக்கவே இத்தரை மதிக்கவே சதிபதிகளாய் வாழ்கவே
தருணமே உருமாறி கணவரை தரிசிக்க கருணையே புரியவேண்டும்

## 11

தியாகு: தாராவின் பார்வையிலே—ஓ வெண்ணிலாவே
ஏராள அர்த்தங்கள் ஓ வெண்ணிலாவே
கதவின் ஓரமாய் நின்று இதமாகப் பார்த்தாலும்
அழைப்பதாய் ஓடியே அருகில பேசிடவேண்டும்
கைதவறி நழுவியே கனிவோடு பாாத்தாலும்
காதல் கொண்டாளென்று மெய்மறந்திடவேண்டும்
கண்களைச் சிமிட்டியே கடைக்கண்ணை வீசினால்
காதலன் நானென்று கைபோட்டுத் தரவேண்டும்
முணுமுணுத்து சேலையை முறுக்கியே சொருகினால்
முந்தானையைப்பற்றி பின்தொடர்ந்திட வேண்டும் (தாரா

## 12

சாது & மஞ்சுளா

ஆனந்தம் பரமானந்தம் பாலகிருஷ்ணனின் லீலையை உணர்ந்த
பக்தகோடிக்கே பிரம்மானந்தம் (ஆன
யமுனை கரைதனில் கோபியர் அனைவரும்
கிருஷ்ணனைத் தேடுதல் ஆனந்தம்
யாருக்கும் அரிதெனும் முரளீதரனும்
ராதைக்குக் கிடைப்பது பரமானந்தம் (ஆன
வேணுகானத்தால் சிசுக்களும் பசுக்களும்
தன்னையே மறந்தது ஆனந்தம்
கிருஷ்ணனின் நினைவால் உலகையே மறந்த
ராதையின் தரிசனம் பிரம்மானந்தம் (ஆன

## 13

தியாகு: கையும் கையும் கலந்திடவா ஜாலியாகவே
காதல் கதை பேசிடவா கேலியாகவே (கை
லீலா: ஊஹூம் ஊஹூம்...
லீலா: காத்திருக்கார் பெரியவர்கள் வேலியாகவே
கையும் கையும் கலப்பதென்று ஜாலியாகவே
தியா: கணவன் சொல்லை மறுப்பதென்றும் முறையுமாகுமா
மனதிலுள்ள விரகதாபம் உனக்குத் தெரியுமா ஆஹா (கை
லீலா: ஊஹூம்... ஊஹூம்...
லீலா: விரகமென்று முறையில்லாத பேசலாகுமா
வேலைக்காரி மீது காதல் கொள்ளலாகுமா (கை

## 14

நமச்சி: காசிக்குப் போனேனே-ராமாஹரே
கங்கை தீர்த்தமும் கொண்டாந்தேன்-ராமாஹரே
கங்கைதீர்த்தம் நான் கொண்டாந்தேன் ராமாஹரே

உஷா: காசிக்குப் போகல்லே மாமா ஹரே-இது
கார்ப்பரேஷன் தண்ணி மாமாஹரே-சென்னை
கார்ப்பரேஷன் தண்ணி மாமாஹரே

நமச்: வடலூரு போனேனே ராமாஹரே-ஜோதி
திருநீறு கொண்டாந்தேன் ராமாஹரே-ஸ்வாமி
திருநீறு கொண்டாந்தேன் ராமாஹரே

உஷா: வடலூரு போகல்லே மாமாஹரே-அசல்
சுடுகாட்டு சாம்பலிது மாமாஹரே-நிசமா
சுடுகாட்டு சாம்பலிது மாமாஹரே

நமச்: அன்னமே உண்பதில்லே ராமாஹரே-எந்தன்
ஆகாரம் காற்றுதான் ராமாஹரே-என்றும்
ஆகாரம் காற்றுதான் ராமாஹரே

உஷா: ஆகாரம் காற்றேடு மாமாஹரே-பால்
கோவாவும் விழுங்கறே மாமாஹரே-பாதம்
அல்வாவும் முழுங்கறே மாமாஹரே

நமச்: கைலாசம் போனேனே ராமாஹரே-சிவனைக்
கண்ணாலே பார்த்தேனே ராமாஹரே-ரெண்டு
கண்ணாலே பார்த்தேனே ராமாஹரே

உஷா: கண்ணாலே பார்த்திருந்தா மாமாஹரே-சிவனைக்
கண்ணாலே பார்த்திருந்தா மாமாஹரே-நீயும்
பின்னாலே சுத்துவியா மாமாஹரே-எந்தன்
பின்னாலே சுத்துவியா மாமாஹரே

நமச்: ஆசைக்கு மனைவி இல்லை ராமாஹரே—என்றும்
ஆத்மயோகி நானே ராமாஹரே—பெரிய
ஆத்மயோகி நானே ராமாஹரே

உஷா: அது மாத்திரம் நிஜந்தானே—மாமாஹரே—நானும்
அதுக்காகத்தான் வந்தேன்—மாமாஹரே—சும்மா
அளக்காமே புறப்படு மாமாஹரே

**வணக்கம்!**

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| ஆர். கணேஷ் | ... | நாகராஜன் |
| டி. எஸ். பாலைய்யா | ... | தருமலிங்கம் பிள்ளை |
| கே. ஏ. தங்கவேலு | ... | நமச்சிவாயம் |
| டி. ஆர். ராமச்சந்திரன் | ... | தியாகராஜன் |
| எஸ். வி. ரங்காராவ் | ... | கருணாகரம் பிள்ளை |
| கே. சாரங்கபாணி | ... | சொக்கலிங்கம் |
| ஏ. கருணாநிதி-பக்கிரிசாமி | ... | நாடகக் குழுவினர் |
| ஆர். நாகேஸ்வரராவ் | ... | பயில்வான் பீமன் |
| வி. எம். ஏழுமலை | ... | சுப்பைய்யா |
| சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன் | ... | செட்டியார் |
| எல். நாராயணராவ் | ... | கிழத்தந்தை |
| வாதிராஜ் | ... | கிட்டு |

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| சாவித்திரி | ... | மஞ்சுளா |
| ஜமுனா | ... | லீலா |
| ஈ. வி. சரோஜா | ... | உஷா |
| டி. பி. முத்துலட்சுமி | ... | விசாலம் |

கதை:

சக்கரபாணி, சதாசிவ பிரம்மம், பிரசாத்

வசனம் - பாடல்கள்:

தஞ்சை ராமையாதாஸ்

பின்னணிப் பாடியவர்கள்:

ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், எஸ். சி. கிருஷ்ணன், பி. லீலா, சுசீலா, ரத்னமாலா.

இசை: எஸ். ராஜேஸ்வரராவ்

நடனம்: பி. கிருஷ்ணமூர்த்தி

கேவாகலர் நடனம்: ஈ. வி. சரோஜா

ஒளிப்பதிவு: மார்க்ஸ் பார்ட்லே

ஒலிப்பதிவு: வி. சிவராம் பி. ஏ. பி. எஸ். ஸி.

டைரக்ஷன்: பிரசாத்

தயாரிப்பு: விஜயா

நிர்வகிப்பு:

**நாகிரெட்டி & சக்ரபாணி**

ஸ்டூடியோ: வாஹினி

கலைமகள் அச்சகம், மதுரை.